செ.வெ.எண் - 26 நாள்-13.01.2021

**தஞ்சாவூர் மாவட்டத்தில் பருவமழை காரணமாக பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை மாண்புமிகு மாநிலங்களவை உறுப்பினர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்**

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு, அம்மாபேட்டை ஆகிய பகுதிகளில் பருவ மழையின் காரணமாக பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை மாண்புமிகு மாநிலங்களவை உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ம கோவிந்தராவ் இ.ஆ.ப. அவர்கள். முன்னிலையில் இன்று (13.1.2021) நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

தஞ்சை மாவட்டத்தில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. பருவம் தவறிய மழையால் நெற்பயிர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இன்று தஞ்சை மாவட்டம் பேராவூரணி, தாலுகா சேதுபாவாசத்திரம் ஒன்றியம் புக்கரம்பை மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளில் மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை மாண்புமிகு மாநிலங்களவை உறுப்பினர் திரு .ஆர். வைத்திலிங்கம், திரு. ம கோவிந்தராவ் இ.ஆ.ப. ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அப்போது விவசாயிகள் தண்ணீரில் மூழ்கி பாதிக்கப்பட்ட பயிர்களை எடுத்து காண்பித்தனர். இதனை பார்வையிட்டு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநிலங்களவை உறுப்பினர் அவர்கள் விவசாயிகளிடம் கூறினர். அதேபோல் வேளாண் துறை மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களிடம் எந்த ஒரு பாதிப்பும் விடுபடாமல், பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நிவாரணம் கிடைக்கும் வகையில் கணக்கெடுப்பு மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

இதையடுத்து மழையையும் பொருட்படுத்தாமல் பட்டுக்கோட்டை வட்டம் சூரப்பள்ளம், ஒரத்தநாடு வட்டம் புதுர், பாப்பாநாடு நெம்மேளி வடக்கு, அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் திருப்புவனம், கோவில்பத்து உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மழையில் தொடர்ந்து பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை ஆய்வு செய்த விவசாயிகளிடம் குறைகளை கேட்டறிந்தனர்.

இவ்ஆய்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சி.வி.சேகர் (பட்டுக்கோட்டை), திரு.மா. கோவிந்தராசு (பேராவூரணி), சார் ஆட்சியர் திரு. பாலசந்திரன் இ.ஆ.ப.,ஒருங்கிணைந்த மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் திரு காந்தி, வேளாண் துறை இணை இயக்குனர் திரு ஜஸ்டின் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் பலர் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் தஞ்சாவூர்.